# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

DECEMBER
2024

## ஆண்டவர் நம்மோடு



C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 9 |
| அறிந்து கொள்வோம் | 11 |
| Christmas a New Dawn | 12 |
| இனிய இல்லறம் | 14 |
| Church History | 17 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 21 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 23 |
| Daily Bible Reading | 25 |
| ஆராதனை தியானப் பொருள் | 26 |




# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

பெத்தலையில் பாலனாய் பிறந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை நான் பகிர்ந்து கொள்கிறேன்.

2024 ஆம் வருடத்தின் நிறைவான மாதமாகிய டிசம்பர் மாதத்தில் காலடி எடுத்து வைக்க கிருபை செய்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த மாதம் நவம்பர் 17 ஆம் தேதி நமது திருச்சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகையை கொண்டாட கடவுள் அருள் புரிந்தார், கடவுளுக்கு முதலாவது நன்றியை தெரிவிக்கின்றேன். தோத்திரப் பண்டிகை ஆராதனை மிகச் சிறப்பாக நடைபெற்றது, அன்றைய நாளிலும் சிறப்பு விருந்தினராக ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டு C.S.I.Tirunelveli Diocese ஆயர். அருள்திரு.சுவாமிதாஸ் அய்யா அவர்களுக்கு, மற்றும் அனைத்து அமிரகத்தில் இருந்து நம்முடைய ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனைக்கு கடந்து வந்த ஆயர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நமது திருச்சபை மற்றும் பிற திருச்சபைகளிலிருந்து வந்து, தொழுகையை சிறப்பித்த இறை மக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பண்டிகை

சிறப்பாக நடத்த உழைத்த சபைக்குழு அங்கத்தினர்கள், கன்வீனர்கள் திரு. மோகன்தாஸ், திரு. பால் டேனிசா் அவர்களுக்கும் Cell groups, women's Fellowship, Men's Fellowship, Youth Fellowship, Choir, Camp Brother's, Junior Church மற்றும் Stall வைத்து விற்பனை செய்த அனைத்து குடும்பத்தினர்களுக்கும், குழுக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். குழுவாக இணைந்து ஏலத்தை சிறப்பாக நடைத்தி கொடுத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாம் முயற்சிகளிலும் மனம் உவந்து உற்சாகமாக பங்களிப்பு கொடுத்த திருச்சபையின் குடும்பங்கள் மற்றும் தனி நபர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

Nov 29, Nov 30 தேதிகளில் இந்த வருடத்தின் கன்வென்ஷனை சிறப்பாக நமக்கு நடத்திக் கொடுத்த Rev. Samuel John Dhinakaran (C.S.I.Coimbatore Diosese) அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அநேகர் உற்சாகமாய் அந்த கன்வென்ஷனிலே பங்கு பெற்றீர்கள் உங்களை வாழ்த்துகிறேன். கடவுள் தானே உங்கள் விசுவாச வாழ்வை ஆசீர்வதிப்பாராக.

நாம் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை கொண்டாட ஆயத்தமாகிறோம். நம்முடைய திருச்சபையில் நடைபெறுகின்ற எல்லா கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன். ஆண்டவருக்கு சித்தமானால் வழக்கமாக நடைபெறுகின்ற கீதபவனி, வாயிலாக உங்கள் இல்லங்களை சந்திக்க உள்ளோம். இந்த நிகழ்வுகளுக்காக ஜெபியுங்கள் உங்களுடைய முழுமையான ஒத்துழைப்பையும் தாருங்கள். எல்லா மக்களையும் மகிழ்ச்சியில் நிறைத்தருளும் ஆண்டவர் தாமே நம்மையும், நம் குடும்பத்தையும், நமது திருச்சபையையும், ஆட்கொண்டு வழி நடத்துவாராக. நாம் பயணிக்கின்ற இந்த பண்டிகை மாதத்தில், கடவுளின் அமைதியும், மகிழ்ச்சியும், ஆசியும் உங்கள் அனைவரோடும் கூட தங்கி இருப்பதாக. ஆமென்.

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. J.ஜான் ஜெபலின் ஜோஸ்

☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. சங். 65:11

காலங்கள் கர்த்தருடையது. ஒவ்வொரு நாட்களும், வாரங்களும், மாதங்களும், வருஷங்களும் கர்த்தருடையது. இந்த 2024 ஆண்டின் 11 மாதமும் நம்மை அனேக நன்மைகளினால் திருப்தியாய் ஆசீர்வதித்து நாம் நடந்து வந்த வழிகளிலெல்லாம் நம்மை சுமந்து, ஒரு தகப்பன் தன் பாலகனைச் சுமப்பது போல, நம்மைத் தாங்கி, ஏந்தி, தப்புவித்து நடத்தின நம் தேவாதி தேவனை துதிப்போம்.

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது (யாக். 1:17)

அவ்வாறு கர்த்தர் தந்த ஈவுகளை எண்ணி உங்கள் ஜெபங்களினாலும், உழைப்பினாலும், பல்வேறு நிலைகளில் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளாலும் இந்த ஆண்டும் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகையை

சிறப்பாக நடத்த உதவின விழாக் குழுவினர்கள், தன்னார்வத்தொண்டர்கள், திருச்சபையார் யாவருக்கும் நிர்வாகக்குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது திருச்சபையின் வருடாந்திர கன்வென்ஷன் கூட்டங்களில் உற்சாகமாய் பங்கு பெற்ற அனைவரையும் வாழ்த்துகின்றோம். இறை வார்த்தைகளைப் பகிர்ந்துகொண்ட Rev. Samuel John Dinaharan, (CSI Coimbatore Diocese) அவர்களுக்கு திருச்சபையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிறிஸ்து பிறப்பின் பண்டிகைக் கால நிகழ்வுகளுக்காக உற்சாகமாய் ஆயத்தப்படுகின்ற பாடகர் குழு, குழந்தைகள், வாலிப பிள்ளைகள், முகாம் சகோதரர்கள், மற்றும் ஜெபக்குழுக்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

விடுமுறைக்காக தாயகம் மற்றும் பல்வேறு இடங்களுக்கு பயணங்களை மேற்கொள்ளவிருக்கும் திருச்சபையின் குடும்பங்களுக்காக நாம் ஜெபிப்போம். கர்த்தர் தாமே அனைவரையும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா.

சேனைகளின் கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் காத்து வழி நடத்தி ஆசீர்வதிப்பாராக.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**

☎ +971 58 5896 975

**பிரபலமாக வேண்டுமென்றால்**
**செழிப்பை பிரசங்கியுங்கள்ஞ்**
**பிரபலமாக வேண்டாமென்றால்**
**பரிசுத்தத்தை பிரசங்கியுங்கள்ஞ்**

- லியோனார்ட் ராவெனில்



# ஆண்டவர் நம்மோடு

"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். (மத்தேயு 1:23)

கடவுள் மனிதனாகப் பிறந்த நிகழ்வு உலக வரலாற்றில் நிகழ்ந்த ஒப்புயர்வு உன்னத நிகழ்ச்சி, இது மானிட மீட்புக்காக இறைவன் எடுத்த வெளிப்பாடு. இது எல்லா மனிதர்களாலும் புகழப்பட்ட கடவுளின் இரட்சிப்பின் திட்டம். கடவுள் நம் நடுவில் வந்தது அனைத்து படைப்புகளும் சிறப்பாக முழு மானுடமும் இழந்து போன தெய்வீக உறவை மீண்டும் பெறுவதாக அமைகிறது. மக்கள் இறைவனைத் தள்ளிவிட்டு வாழ்க்கை நடத்திய படியால் கடவுள் மனிதனோடு வந்து மக்கள் மத்தியில் தங்கி இருப்பது தேவையாகவே காணப்பட்டது. இந்நிலையில் கடவுள் நம்முடன் இருப்பதால் ஏற்படும் நன்மைகளை நாம் சிந்திப்போம்.

### 1. நம்முடன் இருக்கும் ஆண்டவர் இருளை அகற்றி ஒளியாக்குகிறார்: (எசா.9:2)

இயேசுவின் பிறப்பு ஒன்றுதான் வீழ்ந்து போன மானிடத்தை மீண்டும் கிறிஸ்துவின் வெளிச்சமாகிய உறவுக்குள் கொண்டுவரும் முக்கிய நிகழ்ச்சியாகும். கடவுள் தன் பரலோக மகிமையைத் துறந்து தன்னைத்தான் வெறுமையாக்கி, மானிட ரூபம் எடுத்து பூமியில் வந்து மனுக்குலத்தை மீட்கச் சித்தமானார். (பிலி. 2:6-11). இருளிலும் அந்த காரத்திலும் வாழும் மாந்தர்களை இரட்சிக்க இறைவன் மனுவுருவேற்றார். அவர் நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்தார். யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்பு செய்தார். (எசா. 11:4). இதனால் காரிருளில் வாழ்ந்தோர் மிகுந்த வெளிச்சத்தை கண்டு கொண்டனர்.

### 2. நம்முடன் இருக்கும் ஆண்டவர் ஆலோசனை தருகிறார். (எசா. 9:6)

என்றென்றைக்கும் நான் உங்களோடு இருக்கிறேன் என வாக்கு அருளின இறைவன் தம்முடைய பிறப்பின் ரகசியங்களை ஆழ்ந்து கற்றுக்கொள்ள

உதவி செய்து ஆலோசனை வழங்குகின்றார். ஆலோசனைத் திருப்பணியின் முக்கியத்துவம் உணரப்பட்டு வரும் இக்காலத்தில், உடல், உள்ளம், ஆன்மா சாந்த தேவைகளை உடைய மானிடத்துக்கு ஆண்டவர் உடன் இருந்து உதவி செய்கிறார் என்பது உண்மையாகிறது.

ஆலோசனைத் திருப்பணியின் செயல்பாடுகளை மூன்று நிலைகளில் அறிந்து கொள்ள இயலும்.

1. அனுதாபப்படுதல் **(Sympathy)**

2. அனுதாபப்படுபவருடன் இருத்தல் **(Empathy)**

3. அனுதாபப்பட்டு அவர் தேவையை நிறைவு செய்தல் **(Interpathy)**

இயேசு நம்முடன் இருந்து நமக்காக பரிதாபப்பட்டார். சோகத்துடன் இருக்கிற தம் மக்களுடனிருந்து உதவி செய்து உள்ளத்தின் பாரத்தை வெளியே கொண்டு வந்து பிரச்சனையை நீக்குகிறார். இதற்கு எஸ்தரின் நூல் 4:1 (Sympathy) விடை தருகிறது.

இலாசருவின் வீட்டில் இயேசு கண்ணீர் வடித்து அழுது ஜெபித்தது (யோவான் 10:34). Empathy இதற்கு சிறந்த உதாரணமாகும் .மேலும் இயேசு நம்மோடிருந்து தமது அந்தஸ்தை விட்டு இறங்கி வந்து உதவி செய்ததை வெளிப்படுத்துகின்றது. இதுவே அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலான நிகழ்வு. (பிலி. 2:7). (Interpathy) இயேசுவின் தாய் மரியாள் கருவுற்றிருக்கும் நிலையில் யோசேப்பு நீதிமானாயிருந்தும் அவளை இரகசியமாய் தள்ளிவிட நினைக்கின்றார். அப்போது கர்த்தருடைய தூதன் யோசேப்புடன் யோசேப்பே, தாவீதின் மகனே, அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான் (மத். 1:20) எனக்கூறி யோசேப்பைத் திடனடையச் செய்கிறார். நம்மோடிருக்கும் இயேசு பரலோகத்தை விட்டு பூமியில் இறங்கி வந்தவர், நமக்குள்ளே வாசம் செய்கிறவர், தெய்வீக தன்மையை, தேவ மகிமையைத் துறந்து மானிடராகப் பிறந்தார். அவர் பிறப்பினால் இயேசுவே உலக மீட்பர் என எல்லோரும் அறிந்து கொண்டனர். அவருடைய பிறப்பினால் பாவமான மனுகுலம் இறைவனோடு உள்ள உறவில் மகிழ்ந்தது. நாமும் கிறிஸ்துவை போல, பிறர் வாழ்வடைய உழைப்போம். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# இயேசு கிறிஸ்து சந்தித்த பெண்கள்

இயேசு கிறிஸ்து தன் ஊழியப் பாதையில் அநேக பெண்களை சந்தித்தார். அவர்களுடைய வாழ்வை மாற்றியமைத்தார். பெண்களுக்கு என ஒரு தனி இடத்தை அளித்தார். சமாரிய பெண்ணை சந்தித்தார். ஆவிக்குரிய ஆழமான சத்தியங்களை அவளோடு பகிர்ந்து கொண்டார். நான் சொன்ன எல்லாவற்றையும் எனக்கு சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரில் உள்ள சமாரியரில் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். சீகார் என்ற ஊர் ஒரு பெரிய மாற்றத்தை கண்டது.

இயேசு கிறிஸ்து கிராமம் கிராமமாக சென்றார். அவரோடு கூட திரளான ஜனங்களும் சென்றனர். அவர் பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும் நீக்கி குணமாக்கின சில பெண்களும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனா மரியாளும், ஏரோத்தின் காரியக்காரியான கூசாவின் மனைவி யோவன்னாளும், சூசன்னாளும் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த மற்ற அநேக பெண்களும் அவருடன் இருந்தனர். அவர் மூலமாய் சுகம் பெற்றனர். பிசாசுகள் நீங்க பெற்றனர். அவரிடமிருந்து நன்மை பெற்றுக் கொண்ட அவர்கள், நன்றியுணர்வோடு அவருக்கு ஊழியம் செய்கிறவர்களாய் அவருடன்

சென்றனர். அநேகப் பெண்கள் சிலுவை வரை பின் சென்றனர். அவரை பின் சென்றவர் பல நோக்கங்களோடு சென்றனர். அநேகர் சுகம் பெற்றுக் கொள்ளவும், உணவுக்காகவும் பின் சென்றனர். ஒரு சிலர் அவரை குறைபடுத்துவதற்காகவே சென்றனர். உள்ளத்தையும் உள்ளத்தின் ஆழங்களையும் அறிந்திருக்கிற தேவன், ஒவ்வொருவரையும் கற்றுக் கொண்டார். அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டது.

அவருடைய உபதேசத்தை கேட்க மிகவும் ஆர்வமுள்ளவர்களாய் பெத்தானியா கிராமத்து மரியாள் அவருடைய பாதத்தினருகிலேயே அமர்ந்திருந்தாள். அவருடைய உபதேசத்தினாலே மரியாளும், மார்த்தாளும் விசுவாசத்திலே வளர்ந்தனர். வாழ்க்கையிலே மாற்றம் ஏற்பட்டது.லாசருவை, கூனியான ஸ்திரியை, ஆபிரகாமின் குமாரத்தியை கண்டு விடுவித்தார். இயேசு கிறிஸ்துவின் பாதத்தை நனைத்து,தலை மயிரால் துடைத்து முத்தம் செய்தாள். இயேசுவோ அவளுடைய பாவங்களை மன்னித்தார். இப்படிப்பட்ட பெண்களுக்கு சமுதாயத்தில் இருந்த புறக்கணிப்பயும் வெறுப்பையும் மாற்றி,அவர்களை தேவனுடைய பிள்ளைகளாக்கினார்.

விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை, ஆண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயத்தில், அவளை கல்லெறிந்து கொள்வதில் இருந்து காப்பாற்றினார். அவளுக்கும் பாவ மன்னிப்பை அருளி செய்தார். இயேசு கிறிஸ்து சந்தித்த ஒவ்வொரு பெண்களின் வாழ்க்கையையும் மாற்றியது, ஆசீர்வாதம் பெற்றது. நம்முடைய வாழ்விலும் மாற்றம் உண்டாக அவரைப் பற்றிக் கொள்வோம், விசுவாசத்தில் நிலைத்திருப்பொம். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா



# இந்திய அப்போஸ்தலர்
# சாது சுந்தர்மி சிங்

19 ஆவது வயதிலேயே தீபேத் பகுதிக்கு ஊழியத்திற்காக சாது சாது சுந்தர் சிங் புறப்பட்டு சென்றார். திபேத் நாடு புத்த மதத்தை சார்ந்த நாடு. கிறிஸ்தவம் முற்றிலும் தடை செய்யப்பட்ட இடம். சாது சுந்தர் சிங்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்ததாள் சிறுவயதிலேயே துன்புறுத்தப்பட்டார். துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்றினார். தவறு செய்தவர்களை பாலடைந்த கிணற்றில் போட்டு மூடி விடுவார்கள். இறுதியில் சாது சுந்தர் சிங்கிற்கும் இதே தண்டனை கொடுக்கப்பட்டது. கிணற்றுக்குள் விழுந்தவுடன் அவரது தோள்பட்டை எலும்பு உடைந்தது. அழுகிய பிண நாற்றத்தால் வயிறு குமட்டியது, என்கு பார்த்தாலும் பிணங்கள். கிணற்றுக்குள் இருந்தவாரே ஜெபிக்க ஆரம்பித்தார். மூன்று நாட்களுக்குப் பின் ஒரு அதிசய மனிதரால் கிணற்றுக்கதவு திறக்கப்பட்டது. சாது சுந்தர் சிங் வெளியே சென்று ஆண்டவரின் ஊழியத்தை தொடர்ந்து செய்தார். சாது சுந்தர் சிங் பல நூல்களை எழுதினார். “இரத்தம் சிந்தும் பாதங்களுடைய அப்போஸ்தலன்” என்றும்,” இந்திய அப்போஸ்தலன்” என்றும் சாது சுந்தர் சிங் அழைக்கப்படுகிறார்.”

# CHRISTMAS A New Dawn

**Matthew 4:16 (NIV)**

The people living in darkness have seen a great light; on those living in the land of the shadow of death a light has dawned."

Every year, when the Christmas season approaches, there is a palpable shift in the air. The world seems to pause for a moment, embracing the joy, hope, and love that Christmas brings. For many, it is a time of reflection and renewal, offering a fresh start amid the hustle of everyday life. Christmas represents more than just a holiday—it embodies the spirit of a "new dawn." A time when we celebrate the birth of Christ, reflect on our spiritual journeys, and open our hearts.

Christmas, celebrated on December 25th, has become one of the most significant cultural and religious holidays around the world. For many, it marks the birth of Jesus Christ, the central figure of Christianity, symbolizing hope, love, and renewal. Yet, beyond its religious origins, Christmas has evolved into a time of global celebration, one that invites people to reflect on the past, present, and future, serving as a reminder of the potential for a new beginning. In essence, Christmas represents a new dawn, a fresh opportunity to embrace peace, unity, and transformation.

## A Time for Reflection and Renewal

Christmas also provides an opportunity for reflection. As the year ends people around the world reflect on their lives, celebrate success, learn from mistakes and set new intention for the future. The idea of new dawn at Christmas is not just about the birth of Jesus but about the chance to begin anew. Let us shed old grievances, let go past the burdens and look forward with optimism. Christmas is a reminder that every day brings the possibility of a new beginning a fresh start.

In addition to personal renewal, Christmas fosters a spirit of unity and peace. It is a time when families and friends gather, communities come together, and people of all backgrounds share in the joy of the season

**Isaiah 60:1-2 (NIV)**

"Arise, shine, for your light has come, and the glory of the Lord rises upon you. See, darkness covers the earth and thick darkness is over the peoples, but the Lord rises upon you and his glory appears over you.

" The coming of the Messiah brings a radiant dawn of glory to a world covered

contribution by

*Nancy Agustin*







# வன்கொடுமைக்குள்ளாகும் குழந்தைகள்

**பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே.**
(நீதிமொழிகள் 17:6)

5. குழந்தைகளுக்கு "நல்ல தொடுதலுக்கும்" (Good Touch). "தீய தொடுதலுக்கும்" (Bad Touch) உள்ள வித்தியாசத்தைக் குறித்து நன்கு சொல்லி வையுங்கள். எடுத்துக்காட்டாக, ஒரு மருத்துவரின் தொடுதல் "நல்ல தொடுதல்." ஆனால் ஒரு அன்னியனோ, உறவினரோ, நண்பரோ குழந்தைகளின் அந்தரங்க உறுப்பைத் தொட்டால் அது "தீய தொடுதல்." அப்படித் தீய தொடுதல் செய்பவர் எவராக இருந்தாலும் பிள்ளைகள் தைரியமாக உங்களிடம் தெரிவிக்கத் துணிவூட்டுங்கள். (No matter who does the Bad Touching the child should be encouraged to tell you about it).

6. குழந்தைகள் தாங்களாகவே பள்ளி செல்லும் வயது வரும் வரை. பெற்றோர்களுடனோ அல்லது வழக்கமாகக் கூட்டிச்செல்லும் வாகனத்திலோ செல்லவேண்டும். தன்னைக் கூட்டிச்செல்ல அந்நியரோ அல்லது பழக்கமற்ற வாகனமோ அழைத்தால் ஆசிரியரிடமோ அல்லது பள்ளி முதல்வரிடமோ அதைத் தெரிவித்து, வந்திருப்பவரின் அடையாளத்தை உறுதி செய்தபின் உடன் செல்லவேண்டும் என்பதைக் குழந்தைகள் அறிந்திருக்கவேண்டும். பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கு மிடையே "சங்கேத வார்த்தைகள்" (Code Words) இருந்தால் மிகவும் நன்று.

7. உங்கள் குழந்தைகள் யாராவது தொலைபேசியில் பேசும்பொழுது,

தாங்கள் தனியாக இருப்பதை எக்காரணத்தைக் கொண்டும் எதிர் முனையில் பேசுபவர் அறிந்துகொள்ள இடமளிக்கலாகாது. தெரியாத நபர் எதிர் முனையில் இருந்தால், "அப்பா குளித்துக் கொண்டிருக்கின்றார்" என்றோ அல்லது "அம்மா சமையலில் அவசர வேலையில் இருக்கிறார்" என்றோதான் கூறவேண்டும் எனக் கற்றுக் கொடுத்துவையுங்கள்.

8. வாகனங்களில் (Car, Scooter, Bike) குழந்தைகளைத் தனியே விட்டுவிட்டுச் செல்லாதீர்கள்.

9. குழந்தைகள் வீடு திரும்பும்பொழுது நீங்கள் வீட்டில் இருக்க இயலா நிலை ஏற்பட்டால், அருகிலுள்ள நல்ல அருகிலுளள நண்பர்கள் வீட்டிலோ அல்லது உறவினர்கள் வீட்டிலோ நீங்கள் வரும் வரை தங்கியிருக்க ஏற்பாடு செய்துவிட்டுச் செல்லுங்கள்.

10. பெரியவர்கள் இல்லாமல் குழந்தைகள் தனியாக (Alone) இருக்கும்பொழுது அன்னியர்கள் யாராவது வந்தால் எக்காரணம் கொண்டும் கதவைத் திறக்கக்கூடாது என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும்.

11. தாங்கள் எங்கே போகிறோம், யாருடன் போகிறோம். எப்போது வீடு திரும்புவோம் என்பதைத் தெரிவித்துவிட்டு வெளியில் செல்லவேண்டும் என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்துங்கள்

12. யாராவது அநாவசியமாகத் தொட்டாலோ, கையைப் பற்றி இழுத்தாலோ அல்லது அச்சுறுத்தினாலோ என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுத்தல் அவசியம். அவ்விடத்தைவிட்டு ஓடலாம்; உதவி கேட்டு அலறலாம்; பிடித்திழுப்போரின் கையை அல்லது உடம்பைக் கடிக்கலாம். எட்டி மிதிக்கலாம்; அல்லது பிராண்டலாம்; தப்பிப்பதற்கு எந்தெந்த வழி களுண்டோ அத்தனை வழிமுறைகளையும் பயன்படுத்தலாம் என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்கவேண்டும். முடிந்தால், பிள்ளைகளுக்குக் கராத்தை, குங்ஃபூ போன்ற தற்காப்புக் கலைகளைக் கற்றுக்கொடுக்கலாம்.

13. பிள்ளைகளுடன் அவ்வப்போது பள்ளிக்குச் செல்லும் வழியை நோட்டமிட்டு, அவ்வழி எத்துணை பாதுகாப்பானது என அறிய முயலுங்கள். வழியில் அன்னியரையும் (Strangers), காலி மனைகளுள்ள இடங்களையும் (Vacant sites), புதர்களுள்ள (BUSHES) இடங்களையும் தவிருங்கள்.

14. உங்கள் பிள்ளைகளின் பெயர், படிக்கும் பள்ளிக்கூடம், பிள்ளைகளப் பற்றிய இதர விவரங்களை அன்னியர்கள் அறியும் வண்ணம் உளறவோ அல்லது வெளிப்படுத்தவோ வேண்டாம்.

15. பிள்ளைகள் பெரியவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், மரியாதை

கொடுக்க வேண்டும்; எதிர்த்துப் பேசக்கூடாது. எல்லாம் சரிதான். ஆனால் எல்லாப் பெரியவர்களுக்கும் கீழ்ப்படியவோ, மரியாதை கொடுக்கவோ பிள்ளைகளை வற்புறுத்தாதீர்கள். அன்னியர்கள், அவர்கள் எவ்வளவு வயது முதிர்ந்தவர்களானாலும், ஐயம் எழும் செயல்கள் செய்யத் தூண்டினால் உறுதியாய் முடியாது என்று கூறி மறுக்க, பிள்ளைகளுக்குக் கற்பியுங்கள். எடுத்துக் காட்டாக,

✷ போகும் வழியில் யாராவது ஏதாவது ஒரு படத்தைக் காட்டிக் முடியாது என்று மறுக்க வேண்டும்.

✷ அன்னியர்கள் யாராவது புகைப்படம் எடுக்க முயற்சித்தால் அனுமதிக்கவோ அல்லது ஒத்துக் கொள்ளவோ கூடாது.

✷ நடந்து சென்று கொண்டிருக்கும் காரில் சென்று கொண்டிருக்கும் நபர்கள் பாதை கேட்டால் காரின் அருகே செல்லக் கூடாது. அவசியமானால் தூரத்திலிருந்தே கூறுங்கள்; அல்லது தெரியாது என்ற ஒரு வார்த்தையுடன் அவ்விடத்தைவிட்டு வேகமாக நடையைக் கட்டுங்கள்.

✷ மக்களின் பார்வையிலிருந்து தனியாகவும், மறைவாகவு முன்ன வீடுகளிலோ, வேறு கட்டிடங்களுக்குள்ளோ நுழையக் கூடி என்று கற்பித்து வையுங்கள்.

✷ பிள்ளைகளை அச்சமடையச்செய்யும் அல்லது மன நோவை உண்டாக்கும் நிகழ்வுகள் நிகழின், அதனைப் பெற்றோர் களுக்குத் தைரியமாகத் தெரிவிக்க மன தைரியத்தைப் பிள்ளைகளிடம் வளருங்கள்.

15. அறிமுகமில்லா அன்னியர்கள் நண்பர்கள் போன்று பழக முயன்றால் விழிப்பாயிருக்க வேண்டுமென்று கூறிவையுங்கள், முன்பின் தெரியாத வர்கள் இனிப்புப் பண்டங்களோ, பொம்மையோ அல்லது வேறு எந்தம் பொருளோ கொடுத்தால். வாங்கக்கூடாது எனக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.

17. தன்னைத் தொடுவதற்கோ, தன்னை மன உளைச்சலுக்குள்ளாக்கு வதற்கோ யாருக்கும் உரிமையில்லை என்றும், எந்த இரகசியங்களையும் பெற்றோர்களிடமிருந்து மறைக்கும்படிக் கூறுவதற்கு மாருக்கும் அதிகாரம் பெற்னே என்பதையும் பிள்ளைகள் திட்டவட்டமாக அறிந்திருக்க வெண்டும்.

# சிறப்புமிக்க (S.P.C.K.) மிஷனெரி சுவார்ட்ஸ்




### தஞ்சை மன்னரின் தலைமைக் குரு

தஞ்சாவூர் அரசருக்கு நெருக்கடி நிறைந்த காலம் அது. தஞ்சாவூரை ஆற்காட்டு நவாபின் ஆளுகையின்கீழ் கொண்டுவர ஆங்கிலேயர் உதவியாக இருந்தனர். குழப்பங்கள் ஓரளவு குறைந்தன. தஞ்சாவூரில் வந்து தங்குமாறு அரசர் சுவார்ட்சுக்கு அழைப்பு விடுத்தார். 1778-ல் தஞ்சாவூர் சென்று 20 ஆண்டுகள் தங்கி, அரசரின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். தாம் சாகும் வரை அங்கேயே குடியிருந்தார்.

"பாதிரியாரே! நீர் கையூட்டுப் பெறாத உத்தமரானபடியால், உம்மை முழுவதுமாய் நம்புகிறேன்" என்று அரசர் கூறினார். அரசருடைய அலுவலர்களில் பலர் சுவார்ட்சைப்போல் நேர்மையானவர்கள் அல்ல என்பதுதானே இதன் பொருள். ஒரு சமயம் அரசு அலுவலர்களின் அடக்குமுறையைத் தாங்க முடியாமல் ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டே ஓடிவிட்டனர். அவர்களையெல்லாம் தஞ்சாவூர் திரும்புமாறு அறிவுரைகூறி ஆறுதல்படுத்தித் திரும்பக் கொண்டுவந்து சேர்த்த பெருமை சுவார்ட்ஸ் அவர்களையே சேரும்.

அரசரும், ஆங்கிலேயரும் தஞ்சாவூர் நிலப்பரப்பை ஆட்சி செய்யுமாறு சுவார்ட்சை வேண்டிக்கொண்டனர். இவர் முதல் மந்திரியைப் போல அரசருக்கு உதவி செய்தார். "தஞ்சை மன்னரின் தலைமைக் குரு" என்று இவர் அழைக்கப்பட்டார். தமக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்க அரசருக்கு வாரிசு இல்லாதபடியால், சரபோஜி என்னும் பத்து வயது சிறுவனைத் தத்து எடுத்திருந்தார். தமக்கு மரணம் நெருங்குவதை அறிந்த அரசர், தம் வாரிசான சரபோஜிக்கு பாதுகாவலராகச் சுவார்ட்சை நியமித்தார். சுவார்ட்ஸ் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முதலில் மறுத்தார். ஆயினும் அரசு அலுவலர்கள் ஊழல் மிக்கவர்களாகவும், நேர்மையற்றவர்களாகவும், நிர்வாகத் திறமையற்றவர்களாகவும் இருந்த காரணத்தால் இப்பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். சுவார்ட்ஸ், அரசு இயந்திரம் செம்மையாகச் செயல்படத் திட்டங்கள் தீட்டினார். சுவார்ட்ஸ் தஞ் சாவூரை ஆட்சி செய்தார் என்று சொன்னால் அது மிகையாகாது.




சுவார்ட்ஸ், சத்தியநாதன் சென்ற இடங்கள்

## ஆங்கிலேயரின் "தூதுவராக" சுவார்ட்ஸ்

பிரெஞ்சுக்காரரின் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்க்க 1779-ல் ஹைதர் அலி திட்டமிட்டார். போரைத் தடுக்க ஹைதர் அலியிடம் தமது தூதரை அனுப்ப ஆங்கிலேயர் விரும்பினர். இதனைக் கேள்வியுற்ற ஹைதர் அலி, "அனுப்புவதாக இருந்தால் அந்தக் கிறிஸ்தவரை அனுப்பட்டும்; அவர் என்னை ஏமாற்றமாட்டார்" என்று சொன்னாரென்றால் அவர் எவ்வளவாய் மதிக்கப்பட்டார் என்று விளங்குகிறதல்லவா?

சுவார்ட்ஸ் ஹைதர் அலியைச் சந்திக்க ஸ்ரீரங்கப்பட்டிணம் சென்றார். சில முறை ஹைதர் அலியைச் சந்தித்துப் பேசினார், பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏதும் ஏற்படவில்லை. அவரது முயற்சி தோல்வியடைந்தது. ஆயினும் அங்கு அவர் செலவிட்ட மூன்று வாரக்காலம் வீணாகவில்லை. ஹைதர் அலியின் படையிலிருந்த கிறிஸ்தவர்களான இந்திய, ஐரோப்பியப் போர் வீரர்களுக்கு வழிபாடுகள் நடத்தினார். கோட்டைக்கு வெளியிலிருந்த கூடாரத்தில் காத்திருந்த சமயம் அவரைச் சந்திக்கப் பலர் வந்தனர். அவர்களுக்கு இயேசுவைக் குறித்துச் சொன்னார்.

## போர்க்காலத் துயர்துடைப்புப் பணியாளர்

போர் அபாயம் நெருங்குவதைச் சுவார்ட்ஸ் உணர்ந்தார். உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடும் அல்லவா? தஞ்சாவூர் திரும்பியதும் போதுமான

அரிசி வாங்கிச் சேமித்து வைத்தார். சோழ மண்டலக் கடற்கரைப் பிரதேசத்திற்கும், மைசூருக்கும் இடையே உள்ள நிலப் பரப்பில் 1780 முதல் 1784 வரை கடும்போர் நடந்தது. திரளான அகதிகள் தஞ்சாவூரில் தஞ்சம் புகுந்தனர். கோட்டைக்குள்ளும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. தஞ்சை விவசாயிகள் தங்கள் கைவசமிருந்த அரிசியை விற்க முன்வரவில்லை. அரசு அலுவலர்கள் நியாயமான விலை கொடுத்து அரிசியைக் கொள்முதல் செய்வார்கள் என்று அவர்கள் நம்பவில்லை. சுவார்ட்சை அணுகி ஆலோசனை கேட்டனர். நியாயமான விலை கொடுத்து அரிசி வாங்க ஏற்பாடு செய்தார். அதற்குப் பிறகுதான் வண்டிகளில் அரிசியை ஏற்றிக்கொண்டு நகரத்திற்குள் நுழைந்தனர்.

ஹைதர் அலியின் போர் வீரர்கள் தஞ்சாவூருக்கு அருகில்தான் முகாமிட்டு இருந்தனர். இருப்பினும் சுவார்ட்ஸ் எல்லா இடங்களுக்கும் எவ்வித இடர்ப்பாடுமின்றிச் செல்ல முடிந்தது. இவருக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்று ஹைதர் அலி ஆணையிட்டிருந்தார். அனைவரும் அவரைப் பெரிதும் மதித்து மிகவும் கனிவாக நடந்து கொண்டனர். இவ்வளவாக ஹைதர் அலி அவரை மதித்தார்.

### திருநெல்வேலிக்குப் பயணம்

சுவார்ட்ஸ், பல்வேறு பணிகளுக்கிடையிலும் 1778-ல் திருநெல்வேலி செல்ல நேரத்தை ஒதுக்கினார். இருநூற்றைம்பது கிலோமீட்டர் பயணம் செய்தார். நெல்லை செல்லும் வழியிலுள்ள மதுரைக்குச் சென்றார். அங்குச் சென்ற புராட்டஸ்டண்ட் திருச்சபை முதல் மிஷனெரி இவரே ஆவார்.

திருநெல்வேலிப் பகுதியில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான கிராமங்களையெல்லாம் பாளையக்காரர்கள் 1765-ல் குறையாடினர். இக்கிராமங்களைப் பாதுகாக்கப் பாளையங்கோட்டைக்குப் படைவீரர்கள் அனுப்பப்பட்டனர். படை வீரர்களில் சிலர் கிறிஸ்தவர்கள்; திருச்சியிலிருந்தும் தஞ்சாவூரிலிருந்தும் வந்தவர்கள் அவர்களுக்குச் சுவார்ட்ஸ் வழிபாடுகள் நடத்தினார். மராத்திய பிராமண விதவை ஒருத்தியை அங்குச் சந்தித்தார். ஆங்கிலேயப் படை வீரன் ஒருவன் மூலமாக அவர் ஏற்கெனவே இயேசுவைக் குறித்து அறிந்திருந்தார். சுவார்ட்ஸ் அவருக்கு மேலும் போதனைகளை அளித்துத் திருமுழுக்குக் கொடுத்தார். குளோரிந்தா என்று அவருக்குப் பெயரிட்டார். இவர் திருநெல்வேலியில் தோன்றிய கிறிஸ்தவ சபைக்குத் தலைவியானாள். இவருடைய தளராத ஊக்கத்தினால் திருநெல்வேலியில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 61 - 70

1. இருதயம் தொய்யும் போது எங்கிருந்து தேவனை நோக்கி கூப்பிடுவேன் என்று தாவீது கூறுகிறார்?
2. ஐஸ்வரியம் விருத்தியானால் எதை அதின் மேல் வைக்ககூடாது?
3. தேவனுக்குள் இருக்கிறது என்ன?
4. ஜீவனைப் பார்க்கிலும் நல்லது எது?
5. யாருடைய நாவு பட்டயத்தைப்போல் கூர்மையாக இருந்தது?
6. தேவரீர் பூமியை விசாரித்து எந்த நதியினால் செழிப்பாக்குவீர்?
7. பள்ளத்தாக்குகள் எதனால் மூடி இருக்கிறது?
8. “”ஆண்டவர் எனக்கு ஏன் செவிக்கொண்டார்” எப்போது?
9. வெள்ளியைப் புடமிடுகிறது போல புடமிட்டப்பட்டது யார்?
10. பூமியின் எல்லைகளெல்லாம் யாருக்கு பயந்திருக்கும்?
11. தேவன்,திக்கற்ற பிள்ளைகளுக்கு? விதவைகளுக்கு?
12. பரிசுத்த ஸ்தலத்திலே யார் நடந்து வருகிற நடைகளை கண்டார்கள்?
13. உயர்ந்த சிகரங்களுடைய பர்வதம் எது?
14. யாருடைய இருதயம் வாழும்?
15. தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் யார் சொல்லுவார்கள்?

கடந்த நவம் பர் மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jashwanth
2. Mrs.Ruby Jeyaseelen
3. Mrs.Kavitha Johnson
4. Mrs.Baby Jesudass
5. Mrs.Selina Stephen
6. Mrs.Benisha
7. Mrs.Rubavathy
8. Mrs.Sylvia Sekar
9. Mrs.Jone Bino
10. Mrs.Thangamani Anbalaganagan

**Children's Corner Colouring**

1. S.San Hedrin

Don’t forget to send your answers to Pastor Uncle by the 15th of this month. 050 462 4217

Kids Corner

## Colour This

Jesus is alive today. Grab your art supplies and colour this picture.



# One Way, Jesus


Find out more about this true account from **Matthew 28:1-10**

God loves us so much that He sent His Son, Jesus, to die on the cross for us. Jesus died and took the punishment for all the wrong things we do. But Jesus is stronger than death, and He came back to life! Jesus wants to be our friend forever. If we ask Him to, He'll take away the wrong things we've done and fill our lives with His love. Jesus will always be with us and will help us make the right choices. If we believe in Jesus and ask Him to forgive us, someday we'll live with Him forever in heaven.



## Bible Verse

Write the letters above the numbers they have replaced on the clock face to fill in the blanks. Once you're done, memorize the verse (John 3:16)!




FOR GO(1)D S__(1) __(12) __(1) __(3) ED THE

WOR__(12) D THAT HE GA__(3) E HIS ONE

AND O__(6) LY S__(1) N, THAT W__(11) OEVER

__(7) ELIEVE__(10) IN HIM SHALL __(6) OT

PERIS__(11) BUT HAVE __(5) TE__(9) NAL

__(1) IF__(5).

# Birthday & Wedding day Celebrants

**1st Dec**
MISS. JERLYN JOSHNA
MASTER. STEFFANO JOEL

**2nd Dec**
MR. DINO DEVRAJAN
MISS. NUHA

**3rd Dec**
MASTER. GOKUL RAJ.J

**4th Dec**
MRS. VANITHA
MASTER. ADAM RISTEN

**6th Dec**
MISS. ASLIN.A

**7th Dec**
MRS. JUDITH SHINY. J

**9th Dec**
MASTER. SHARON DAVID D.
MRS. RATTHI
MRS. RADHIKA SEKAR
MRS. MERCY THANGA SHEELA G
MR. DARWIN RAJAPANDIAN
MASTER. JAFAN ABRIEL

**10th Dec**
MASTER. M.ROHAN

**12th Dec**
MRS. MERLIN ROSE
MISS. AKSHARA.R

**13th Dec**
MR. ABIL QUBILIUS G.P

**16th Dec**
MRS. KEN EARLIN
MR. BELSON R.
MR. PRAVIN KUMAR NOAH SRINIVASAN

**17th Dec**
MISS. SHEENA RAJAMANI D.
MASTER. DANIEL.S

**21th Dec**
MISS. JEMIMA SERAPHINA
MISS. ALWITHA ANGEL

**22th Dec**
MISS. CHRISTY.J

**23th Dec**
MR. THOMAS KOILRAJ
MR. STEVEN SARAVANAN

**24th Dec**
MR. CHRISTOPHER SANTHA SEELAN

**25th Dec**
MISS. JENIFER CHRISTINA J.

**26th Dec**
MRS. JANSI INDIRA

**27th Dec**
MR. REV.JOHN JEBALIN JOSE
MR. ALWIN JOSE

**28th Dec**
MASTER. THOMSON DANIEL
MRS. JULIE VIOLET GRACE K.

**29th Dec**
MR. ALWIN.A

**31st Dec**
MRS. PRIYA CHRISTOBEL SUJIN
MASTER. CHRIS BINAY B.

## Wedding Anniversary

**4th Dec**
MR. KOILPITCHAI T. & MRS. HEBZI K.

**6th Dec**
MR. JOHNSON GNANARAJ S. & MRS. PRAMILA

**7th Dec**
MR. GODGIL ROBINSON & MRS. TILAKAVATHI

**8th Dec**

MR. RAJAN.D & MRS. JANSI.R
MR. JASHWANTH RAJESH KUMAR & MRS. STELLA RUBI JASHWANTH
MR. RUBAN JEBADURAI & MRS. MERLINE GNANA LINCY

**9th Dec**

MR. KOIL PITCHAI SAMUEL C. & MRS. VIMALA RANI K.
MR. ALWIN JOSE & MRS. ANUSHYA

**10th Dec**

MR. SAMUEL SATHIYA & MRS. EARLY STAR SATHIYA
MR. M.BASKARAN & MRS. SUSI VASANTHA KIRUBAI BASKARAN

**13th Dec**

MR. MANOJ ABRAHAM & MRS. ESTHER JOYCE
MR. DANIEL THANIGESH T. & MRS. KEN EARLIN
MR. VINU JOHNSON & MRS. BENISHA CHRISTABEL

**14th Dec**

MR. ANANTHA RAJ & MRS. A.JENI PRIYA
MR. A. AKASH JEBANATH & MRS. R. MONICA RAJA KUMAR

**16th Dec**

MR. PRAVEEN R. & MRS. VANITHA P.

**19th Dec**

MR. NELSON.J & MRS. DINO.S

**20th Dec**

MR. ABRAHAM.T & MRS. MARIA THERASA RANI.A

**24th Dec**

MR. C.MARTIN & MRS. D.LISSY

**27th Dec**

MR. PRINCE RAJKUMAR D. Y. & MRS. RATTHI
MR. DONALD JMES D'SILVA & MRS. SALINI D'SILVA

**28th Dec**

MR. DEIVASIGAMANI S. & MRS. KAVITHA S.
MR. ROSE ROBIN .S & MRS. R.MERITA JEYAKUTTI
MR. G.ARUN JEBASTIN & MRS. A. JAINY JANET JENITTA
MR. CHARLES PRATHAP.G & MRS. PRAVEENA PRATHAP

**29th Dec**

MR. PAUL RAJ RAJA K. & MRS. KAVITHA PAUL RAJ RAJA
MR. VIJAYANAND MJ & MRS. DEEPA VIJAYANAND
MR. S.OBEATH SELWIN & MRS. A.EDITH MIRIAM
MR. PAULDENISER SEKAR & MRS. PRABHA MOHANDASS

**30th Dec**

MR. AUGUSTINE VIJAYAN DEV PETER & MRS. NANCY AUGUSTINE
MR. JEBAHAR & MRS. MERLIN ROSE

# DAILY BIBLE READING DECEMBER 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 SUN | சங்கீதம் / PSALMS 128 | சங்கீதம் / PSALMS 129 |
| 02 MON | எண்ணாகமம் / NUMBERS 25:1-18 | எண்ணாகமம் /NUMBERS 26:1-36 |
| 03 TUE | எண்ணாகமம் / NUMBERS 26:37-65 | எண்ணாகமம் /NUMBERS 27:1-22 |
| 04 WED | எண்ணாகமம் / NUMBERS 28:1-31 | எண்ணாகமம் /NUMBERS 29:1-40 |
| 05 THUR | எண்ணாகமம் / NUMBERS 30:1-16 | எண்ணாகமம் /NUMBERS 31:1-24 |
| 06 FRI | எண்ணாகமம் / NUMBERS 31:25-54 | எண்ணாகமம் /NUMBERS 32:1-42 |
| 07 SAT | எண்ணாகமம் / NUMBERS 33:1-56 | எண்ணாகமம் /NUMBERS 34:1-29 |
| 08 SUN | சங்கீதம் / PSALMS 130 | சங்கீதம் /PSALMS 131 |
| 09 MON | எண்ணாகமம் / NUMBERS 35:1-34 | எண்ணாகமம் /NUMBERS 36:1-13 |
| 10 TUE | உபாகமம் /DEUTERONOMY 1:1-18 | உபாகமம் /DEUTERONOMY 1:19-46 |
| 11 WED | உபாகமம் /DEUTERONOMY 2:1-37 | உபாகமம் /DEUTERONOMY 3:1-29 |
| 12 THUR | உபாகமம் /DEUTERONOMY 4:1-49 | உபாகமம் /DEUTERONOMY 5:1-33 |
| 13 FRI | உபாகமம் /DEUTERONOMY 6:1-25 | உபாகமம் /DEUTERONOMY 7:1-26 |
| 14 SAT | உபாகமம் /DEUTERONOMY 8:1-20 | உபாகமம் /DEUTERONOMY 9:1-29 |
| 15 SUN | சங்கீதம் /PSALMS 132 | சங்கீதம் /PSALMS 133,134 |
| 16 MON | உபாகமம் /DEUTERONOMY 10:1-22 | உபாகமம் /DEUTERONOMY 11:1-32 |
| 17 TUE | உபாகமம் /DEUTERONOMY 12:1-32 | உபாகமம் /DEUTERONOMY 13:1-18 |
| 18 WED | உபாகமம் /DEUTERONOMY 14:1-29 | உபாகமம் /DEUTERONOMY 15:1-23 |
| 19 THUR | உபாகமம் /DEUTERONOMY 16:1-22 | உபாகமம் /DEUTERONOMY 17:1-20 |
| 20 FRI | உபாகமம் /DEUTERONOMY 18:1-22 | உபாகமம் /DEUTERONOMY 19:1-21 |
| 21 SAT | உபாகமம் /DEUTERONOMY 20:1-20 | உபாகமம் /DEUTERONOMY 21:1-23 |
| 22 SUN | சங்கீதம் /PSALMS 135 | சங்கீதம் /PSALMS 136 |
| 23 MON | உபாகமம் /DEUTERONOMY 22:1-30 | உபாகமம் /DEUTERONOMY 23:1-25 |
| 24 TUE | உபாகமம் /DEUTERONOMY 24:1-22 | உபாகமம் /DEUTERONOMY 25:1-19 |
| 25 WED | உபாகமம் /DEUTERONOMY 26:1-19 | உபாகமம் /DEUTERONOMY 27:1-26 |
| 26 THUR | உபாகமம் /DEUTERONOMY 28:1-37 | உபாகமம் /DEUTERONOMY 28:38-68 |
| 27 FRI | உபாகமம் /DEUTERONOMY 29:1-29 | உபாகமம் /DEUTERONOMY 30:1-20 |
| 28 SAT | உபாகமம் /DEUTERONOMY 31:1-13 | உபாகமம் /DEUTERONOMY 31:14-29 |
| 29 SUN | சங்கீதம் / PSALMS 137 | சங்கீதம் /PSALMS 138 |
| 30 MON | உபாகமம் /DEUTERONOMY 32:1-29 | உபாகமம் /DEUTERONOMY 32:30-52 |
| 31 TUE | உபாகமம் /DEUTERONOMY 33:1-29 | உபாகமம் /DEUTERONOMY 34:1-12 |

# ஆராதனை தியானப் பொருள்

## டிசம்பர் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>Dec-1<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 2:1-10<br>அப்போஸ்தலர் 9:10-18<br>லூக்கா 1:46-56<br>சங்கீதம் 117 | நற்செய்தியைக் கொண்டாடுதல்<br>Celebrating the Good News |
| ஞாயிறு<br>Dec-8<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 1 இராஜாக்கள் 19:1-21<br>வெளிப்படுத்தல் 10:1-11<br>லூக்கா 1:39-45<br>சங்கீதம் 119:33-40 | இறைவாக்கு : தூண்டப்பெற்றது தூண்டுவதற்கே<br>Word of God : Inspired to Inspire |
| ஞாயிறு<br>Dec-15<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 14:1-14<br>ரோமர் 8:1-11<br>யோவான் 8:31-38<br>சங்கீதம் 37:1-12 | பாவக்கட்டிலிருந்து விடுதலை<br>Deliverance from the Bondage of Sin |
| ஞாயிறு<br>Dec-22<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | உபாகமம் 18:15-22 1<br>கொரிந்தியர் 16:13-24<br>யோவான் 1:1-14<br>சங்கீதம் 28 | மாரநாதா : ஆண்டவரே வாரும்<br>Maran-atha – O Lord come |
| ஞாயிறு<br>Dec-29<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 33:1-11<br>எபேசியர் 6:1-9<br>லூக்கா 15:11-24<br>சங்கீதம் 91 | குடும்பம் எனும் நலமருளும் இடம்<br>Family as Healing Space |